சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
31.10.2020 சனிக்கிழமை

## யாழ்ப்பாணம் வருவோருக்கு கட்டாய தனிமை!

யாழ்ப்பாணம், ஒக்.31
வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவோர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று யாழ்ப்பா

2

## கொரோனா அறிகுறியுடன் இளைஞர்!

வவுனியா, ஒக்.31
வவுனியா, கூமாங்குளத்தில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் காணப்பட்ட இளைஞர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நேற்று அவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், இன்றும் அவருக்குப் பி.சி.

2

# யாழ். நகரில் தொற்றாளர் நடமாட்டம்!

- பல வர்த்தக நிலையங்களுக்கு பூட்டு
- பலர் தனிமைப்படுத்தலில்
- பஸ்ஸிஸ் வந்தோருக்கும் வலைவீச்சு

கொழும்பு, ஒக்.31
கொழும்பில் இருந்து வந்த நல்லூரைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இரு தினங்கள் நடமாடியுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. அதையடுத்து யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 3 கடைகள் சீல் வைக்கப்பட்டதுடன், பலரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

2

## புதினம் தெரியுமோ?

கொழும்பில ஒருத்தர் கையெழுத்து ஒண்டு போட்டுட்டு ஓடித் திரிஞ்சது எல்லோருக்கும் தெரியும்தானே. அதுக்குப் பின்னால ஒரு கதை இருக்குது கண்டியளோ. அங்கால கையெழுத்தையும் போட்டுட்டு, இங்கால பிறகு இல்லை எண்டும் சொல்லி சமாளிக்கப் பாக்கிறார். அவர் ஒரு கல்லில இரண்டு மாங்காய் அடிக்கிற வேலையைச் செய்திருக்கிறார் என்று சந்தியில கதைக்கினம் பாருங்கோ. அரசுப் பக்கம் இருக்கிற ஆக்கள் கதைச்சுத்தான் இந்தக் கையெழுத்து விசயம் நடந்திருக்காம். என்னத்த

2



## வழிபாட்டில் ஈடுபட்ட 15 பேர் இன்று கைது!

வவுனியா, ஒக்.31
வவுனியா, புளியங்குளத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உட்பட 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புளியங்குளம், பழையவாடி கிராமத்திலேயே

7

## 39 தொழிற்சாலைகள் 462 பேருக்கு தொற்று!

*அதிர்ச்சியில் கம்பஹா மாவட்டம்*

கொழும்பு, ஒக்.31
கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையைத் தவிர்த்து மேலும் 39 ஆடைத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 462 தொழிலாளர்கள் கொரோனா

2

## கொரோனா காவு 20

*8 நாள்களில் 7 பேர் சாவு*

கொழும்பு, ஒக்.31
கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார். இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று உயிரி

7

## கொரோனா கொத்தணி: ஆறு சாத்தியக்கூறுகள்!

*விசாரணைகள் நடக்கின்றன என்கிறார் இராணுவத் தளபதி*

கொழும்பு, ஒக்.31
மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனாக் கொத்தணித் தொற்றுக்கான மூலத்தைக் கண்டறியும் விசாரணைகளில் கிட்டத்தட்ட 80 வீதம் நிறைவடைந்துள்ளது. இது தொடர்பாக பல்வேறு கோணங்களில் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். புதிய கொத்தணித் தொற்றுக்கு சாத்தியமான ஆறு காரணி

2

## வவு. வைத்தியர்கள் பொலநறுவைக்கு!

கொழும்பு, ஒக்.31
வவுனியா வைத்தியசாலையில் கடமையில் உள்ள இரு வைத்தியர்களையும், 10 தாதியர்களையும் பொலநறுவை கொரோனா சிகிச்சை வைத்தியாலைக்கு கடமைக்குச் செல்லுமாறு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவர்கள் அங்கு 14 நாள்கள்

2

## தனிமைப்படுத்தலில் ராணுவ அடக்குமுறை

*முன்னாள் பிரதமரின் மகளான வைத்தியர் துஷாரா குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக்.31
தனிமைப்படுத்தல் பொறிமுறை முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு இராணுவ அடக்குமுறை நிலவுகின்றது என்று முன்னாள் பிரதமர் அமரர் ரட்சிறி விக்கிரமநாயக்கவின் மகளான வைத்தியர் துஷாரா விக்கிரமநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். பிரிட்டனில் இருந்து கடந்த 16 ஆம் திகதி இலங்கைக்கு வந்த அவர், நீர்க்கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் 14 நாள்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டார்.

2

## புங்குடுதீவு, வேலணை கடும் கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், ஒக்.31
புங்குடுதீவு, வேலணைப் பிரதேசங்களில் கொரோனாத் தொற்றுள்ளவர்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ள நிலையில், அங்கு சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் இறுக்கப்பட்டுள்ளன. தீவகத்துக்கான பஸ் சேவைகள் இன்று காலை முடக்கப்பட்டது. அதனால் நெடுந்தீவில் இருந்து, குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு வந்த குமுதினிப் படகு, மீண்டும் நெடுந்தீவுக்குத் திரும்பியது. அங்கு சேவையில்

7

## யாழ்ப்பாணம்...

ணம் மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். வெளிமாவட்டங்களில் இருந்து வரும் அனைவரும் 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தப்படுவார்கள். அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.(எ-20)

## கொரோனா...

பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பி.சி. ஆர். பரிசோதனை அறிக்கைகள் கிடைத்த பின்னரே இது தொடர்பான மேலதிக தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-18)

## வவு. வைத்தியர்கள்...

கடமையாற்றுவார்கள் என்றும், அதன்பின்னர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் மீண்டும் வவுனியா வந்த பின்னர் பிறிதொரு குழுவினர் பொலநறுவை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்று கூறப்படுகின்றது. வவுனியா வைத்தியசாலையில் ஏற்கனவே வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், மருத்துவர்களும் தாதியர்களும் இவ்வாறு அழைக்கப்படுவதால் மேலும் பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-18)

# யாழ்.நகரில்...

நல்லூர், புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களைச் சேர்ந்த நால்வருக்கும், உடுவிலைச் சேர்ந்த இருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. நல்லூர், புங்குடுதீவு, வேலணையைச் சேர்ந்த நால்வரும் கொழும்பில் உள்ள ஒரே உணவகத்தைச் சேர்ந்தவர்கள். நல்லூரைச் சேர்ந்தவர் உணவகத்தின் உரிமையாளர். இவர்கள் ஒன்றாகவே பஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.
என்.சி.ஜி. என்ற பெயர்கொண்ட WP NC 8760 என்ற இலக்கமுடைய பஸ்ஸில் கொழும்பிலிருந்து கடந்த 25ஆம் திகதி இரவு 10 மணிக்கு இவர்கள் யாழ்ப்பாணம் புறப்பட்டுள்ளனர்.
மறுநாள் 26ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அங்கிருந்து உணவக உரிமையாளர் முச்சக்கர வண்டியில் நல்லூர், பருத்தித்துறை வீதியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். ஏனைய மூவரும் முச்சக்கர வண்டியில் புங்குடுதீவு, வேலணைக்குச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.
உணவக உரிமையாளர் யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இரு தினங்கள் நடமாடியுள்ளார். வைமன் வீதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம், கோயில் வீதியில் உள்ள உணவகம் என்பவற்றுக்கும் சென்றுள்ளார். சிகை அலங்கரிப்பு நிலையம், உணவகம் என்பன மூடப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். உணவக உரிமையாளரின் அயலவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
தொற்றுக்குள்ளான உணவ உரிமையாளர் பயணித்த முச்சக்கர வண்டிச் சாரதி, கொட்டடியில் உள்ள அவரது இல்லத்தில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்துக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.
தொற்றாளருடன் தொடர்புபட்ட அழகு சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் சில வர்த்தக நிலையங்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மூடப்பட்டுள்ளன. இந்த விற்பனை நிலையங்கள் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ளன. தொற்றாளர் நடமாடிய இடங்கள் தொடர்பில் சுகாதார அதிகாரிகள் தற்போதும் ஆராய்ந்து வருகின்றனர். தொற்றாளருடன் தொடர்பிலிருந்தவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படக்கூடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடந்த 25ஆம் திகதி இரவு 10 மணிக்குப் புறப்பட்ட என்.சி.ஜி. என்ற பெயர் கொண்ட WP NC 8760 என்ற இலக்கப் பஸ்ஸில் பயணித்தவர்கள் தங்களை அடையாளப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. சமூக அக்கறையுடன் அவர்கள் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## புதினம் தெரியுமோ?

கதைச்சிச்சினம் எண்டதும் சந்தைக்கு வரும்தானே. அப்ப பாப்பம்.
கையெழுத்துப் போட்டிட்டு அதுக்கு ஒரு விளக்கமும் குடுத்திருந்தார். ஆனால் அந்த விளக்கம் சனத்திட்ட எடுபடேல. எங்க வாக்கு வங்கி சரிஞ்சு போயிருமோ எண்ட பயத்தில நான் அவன் இல்லை எண்ட மாதிரி அதில இருக்கு விலகிட்டன் எண்டு அறிவிச்சிருக்கிறார். ஆனால் அவர் சொன்னோன அங்க போட்ட கையெழுத்து அழிஞ்சிடுமா என்ன?. ஆக கையெழுத்தும் போட்டாச்சு, இல்லை என்டும் சொல்லியாச்சு. நல்ல திட்டம்தான் பாருங்கோ.
இதில இன்னொரு விசயம் என்னென்டா கையெழுத்துப் போட்டிட்டு அத எப்பிடி சமாளிக்கிறது எண்டு ஒருத்தரிட்ட ஆலோசனை கேட்டிருக்கிறார். அவரும் நல்ல சட்டம்பி எம்.பிதான். சனத்த சமாளிக்கிறத்துக்குத்தான் அரசியல் கைதிகள் விசயமும் இதுக்க இழுபட்டிச்சாம். அந்தாளும் அவருக்கு நல்ல மாதிரி சொல்லிப்போட்டு இங்கால போட்டும் குடுத்துப்போட்டார். அதால கையெழுத்துப் போட்டவர் இஞ்சி தின்ற குரங்கு நிலைமையில இப்ப இருக்கிறாராம்.
தங்கட ஆதாயத்துக்கு எல்லாம் செய்து போட்டு தமிழ் மக்களின்ட பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை என்று பூசி மெழுகிறது அவ்வளவு நல்லா இல்லைக் கண்டியளே. சனமும் அந்தளவு முட்டாள்கள் இல்லைதானே.

-பட்சி

## 39 தொழிற்சாலைகள்...

வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சி புள்ளிவிவரம் வெளியாகியுள்ளது.
இலங்கை முதலீட்டுச் சபையின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.
கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலைகளைச் சேர்ந்த 414 தொழிலாளர்களும், பியகம சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 12 தொழிலாளர்களும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கம்பஹாவின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது தவிர மேலும் 10 தொழிற்சாலைகளைச் சேர்ந்த 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீர்கொழும்பில் மீன்பிடித்தொழிலுடன் தொடர்புபட்டுள்ள சமூகத்தினர் மத்தியில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ22)

# தனிமைப்படுத்தலில்...

சுயதனிமையில் இருந்த அவர் சமூக வலைத்தளத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார். நான் பிரிட்டனில் வைத்தியராக பணியாற்றுகின்றேன். கடந்த 16 ஆம் திகதி நாட்டுக்கு வந்தேன். நீர்கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டேன். 14 நாள்கள் நிறைவடைந்த நிலையில் என்னை நேற்று விடுவித்திருக்கவேண்டும். அவ்வாறு விடுவிக்காமல் பலவந்தமாக தடுத்து வைத்துள்ளனர்.
முதல் பி.சி.ஆர். பரிசோதனை விமான நிலையத்தில் வைத்தும் 10 நாள்களுக்குப் பின்னர் அதாவது கடந்த 26 ஆம் திகதி ஹொட்டலில் வைத்தும் பி.சி. ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. நேற்றுமுன்தினம் அந்த முடிவுகள் வெளியாகியிருக்கவேண்டும். இராணுவக் கோப்ரல் ஒருவர் என்னிடம் கதைத்தார், உங்களிடம் இருந்து பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் சரியாக பெறப்படவில்லை எனக் கூறினார். அப்படியானால் மீண்டும் சரியாக செய்வார்கள் என்றே நான் நினைத்தேன். ஆனால் தனியார் வைத்தியசாலை ஊடாக செய்து கொள்ளுங்கள், முடிவு வெளிவரும் வரை ஹோட்டலில் தங்கியிருங்கள் எனக் கூறினார். இதற்கு நான் உடன்படவில்லை.
நாங்கள் 16 மணிநேரம் வேலை செய்தே லண்டனில் உழைக்கின்றோம். இறப்பில் இருந்து பணம் பறிக்க வில்லை. அதுமட்டுமல்ல ஏற்கனவே பணம் செலுத்தியே தனிமைப்படுத்தலை முன்னெடுக்கின்றோம். பி.சி.ஆர். பரிசோதனைக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. பின்னர் பிரத்தியேகமாக அதனை செய்யமுடியாது என பதிலளித்தேன். பின்னர் இராணுவ வைத்தியர் ஒருவர் கதைத்தார்.
"நீங்கள் மட்டும்தான் இப்படி சொல்கின்றீர்கள், ஏனையோர் உடன்பட்டுள்ளனர். பிரத்தியேகமாக செய்யுங்கள். அதற்கு முன்னர் வெளியேற முற்பட்டால் கைது செய்வோம்." என எனக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
பி.சி.ஆர். பரிசோதனைக்கான எமது மாதிரிகள் எம்.ஆர்.ஐக்குதான் அனுப்பப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு அனுப்படவில்லை. பெயர்கள் உள்ளன, மாதிரிகள் இல்லை என ஐ.ஆர்.ஐயில் கூறப்பட்டது. இது தொடர்பில் இராணுவத்திடம் வினவிய போது, மாதிரிகளை தேடிக்கொண்டிருக்கின்றோம் எனக் கூறினர். எனக்கு அச்சம் ஏற்பட்டது. யாரின் மாதிரிகள், யாருக்கு செல்லும் என தெரியவில்லை. எனக்கு நோய்க்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. சிலவேளை 'பொசிடிவ்' என காண்பிக்கப்பட்டால் என்ன செய்வது?. எனவே, மீண்டும் மாதிரிகள் பெறப்படவேண்டும் என வலியுறுத்தினேன்.
"பரிசோதனை செய்யப்படும், முடிவு வெளிவரும்வரை வெளியேறமுடியாது, அவ்வாறு வெளியேறினால் கைது செய்யப்படுவீர்கள்." என மிரட்டப்பட்டேன். இது இராணுவ அடக்குமுறையாகும். தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்தியர்கள் முதல் எல்லோரும் இராணுவத்தினர் தான். சிவில் நபர்களை காணமுடியாது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்ன செய்கின்றது?. இராணுவ ஆட்சி இல்லை எனக்கூறப்படுகின்றது. அது அப்பட்டமான பொய்.
ஒரு நபரை எப்படி பலவந்தமாக வைத்திருக்கமுடியும்? அதுமட்டுமல்ல பிரத்தியேக தொலைபேசிகளில் இராணுவத்தினர் படமெடுக்கின்றனர். போராடியே அவற்றை அழிக்க வைத்தேன். எனக்கு நோய் அறிகுறிகள் எதுவும் இல்லை, ஹோட்டலுக்கு அருகில்தான் வீடும் உள்ளது. முதல் தொடர்பு நபரை வீட்டில் தனிமைப்படுத்தலாம் என்ற ஏற்பாடும் தற்போது உள்ளது. வீட்டுக்கு அனுப்பி பரிசோதனை செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் இங்கு பலவந்தமாக தடுத்துவைத்து, கைது செய்வதாக மிரட்டப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## கொரோனா கொத்தணி:...

கள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றன. விசாரணை முடிந்ததும் இது குறித்த முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆறு சாத்தியக்கூறுகளில் வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்களுடனான தொடர்பும் உள்ளடங்கின்றது. வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்களின் தனிமைப்படுத்தல் செயன்முறை இராணுவத்தால் கையாளப்படுவதால் அதற்கான சாத்தியம் குறைவாகவும் இருக்கின்றது. புதிய கொத்தணிக்கான ஏனைய சாத்தியங்களாக ஹொட்டல்களில் தனிமைப்படுத்தப்பட்ட விமானிகள், மாத்தளை அல்லது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து விமான நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட விமான சேவை ஊழியர்கள், இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்த கப்பல் பணியாளர்கள் அல்லது இந்தியாவில் இருந்து மஞ்சள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.
மினுவாங்கொட கொத்தணிக்கான காரணிகளில் ஒன்றாக உக்ரேனிய விமானி ஒருவர் இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன.
துருக்கியில் இருந்து வந்த உக்ரேனிய விமானி சீதுவையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டார். இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த விமானி ஹொட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நேரத்தில் ஹொட்டல் நிர்வாகம் உரிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறிவிட்டது. இவர் தனிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஹொட்டல் ஊழியர்கள் பலர் வீட்டுக்குச் சென்று வந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த விமானியின் வருகைக்கு சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் எந்தவொரு தொற்று நோயாளரும் கண்டறியப்படாததால் மினுவாங்கொட கொத்தணியின் முக்கிய காரணியாக இது இருக்கக் கூடும் என வலுவான சந்தேகம் இருக்கின்றது. இதற்கிடையில், பேலியகொட கொத்தணித் தொற்றின் பின்னணியில் இந்தியர்களிடம் இருந்து மீனைப் பெற்று அதனை இலங்கை மீனவர்கள் நாட்டுக்குள் விற்பனை செய்ததும் காரணியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இத்தகைய அனைத்து சாத்தியங்களும் ஆராயப்பட்டு தெளிவான முடிவு எட்டப்படும்" என்றார். (எ-22)



# துப்பாக்கி, வாள் பொலிஸாரால் மீட்பு

மட்டக்களப்பு, ஒக்.31

மட்டக்களப்பு சவுக்கடி பிரதேசத்தில், உள்ளூர் துப்பாக்கி ஒன்றும் வாள் ஒன்றும் மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் வாள் ஆகியவற்றை, ஏறாவூர் பொலிஸாரிடம் குற்றவியல் பிரிவு ஒப்படைத்துள்ளது.

குற்றவியல் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அங்கு விரைந்த குற்றவியல் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பற்றை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி டி.எஸ்.டி.பண்டார தலைமையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்றவியல் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)

# பி.சி.ஆர். இயந்திரம் பழுது: வந்தடைந்தது சீனக்குழு



கொழும்பு, ஒக்.31

பழுதடைந்துள்ள பி.சி.ஆர். இயந்திரம் ஒன்றைத் திருத்துவதற்கு சீனாவிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் குழுவொன்று நேற்று இரவு இலங்கை வந்தடைந்துள்ளது. இதனை இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. இயந்திரம், பழுதடைந்தமைக்காக காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது. இதேவேளை, பி.சி.ஆர்.இயந்திரங்கள் சில பழுதடைந்துள்ளமையினால் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# கைத்தொழிற்சாலையில் 49 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.31

வத்தளையில் உள்ள கைத்தொழிற்சாலையில், 49 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொழிற்சாலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர் என்று வலயத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வருண அபேசேகர தெரிவித்துள்ளார்.

அந்தக் கைத்தொழிற்சாலையில் உள்ள 120 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், 49 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கைத்தொழிற்சாலை தற்போது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# நிவாரணப் பொதி வழங்கல் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.31

கொரோனாத் தொற்று பரம்பலையடுத்து, கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்காக உலர் உணவு நிவாரணப் பொதி வழங்கும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொதியும் பத்தாயிரம் ரூபா பெறுமதியானவை. இவற்றில் 14 நாள்களுக்குத் தேவையான உலர் உணவும், பழ வகைகளும் உள்ளடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 68 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

நிவாரணப் பொதிகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, முடக்க நிலை காரணமாக ஒரு மாத காலத்துக்கு மேலாக வாழ்வாதாரங்களை இழந்த குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டமும் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# பொலிஸ் அதிகாரிகள் 60 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.31

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட 60 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்தப் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்புடைய ஆயிரத்து நூற்றுக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)





ஓட்டமாவடி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் வகையில், பொது இடங்களில் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்பட்டன. (க-150)

# மட்டு.ஆடைத்தொழிற்சாலை மூன்று நாள்களுக்குப் பூட்டு

மட்டக்களப்பு, ஒக்.31

மட்டக்களப்பு ஆரையம்பதியில் அமைந்துள்ள பிராண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையை தற்காலிகமாக மூன்று நாள்களுக்கு மூடுமாறு கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி மற்றும் மாவடிமுன்மாரியில் கண்டறியப்பட்ட இரு கொரோனாத் தொற்றாளர்களின் நெருங்கிய உறவினர்கள் இந்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருவதையடுத்து இன்று முதல் தொழிற்சாலையை தற்காலிகமாக 3 நாள்களுக்கு மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தொழிற்சாலையை கிருமிநாசினி விசிறி சுத்தப்படுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 3 ஆயிரம் பேர் தொழில்புரிந்து வருகின்றனர்.

இந்தநிலையில் மினுவாங்கொட கொரோனாத் தொற்றை அடுத்து இந்த தொழிற்சாலையில் தற்போது ஊழியர்கள் குறைக்கப் பட்டு இங்குள்ள பணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனாத் தொற்றுக்குள்ளான இருவரது உறவினர்கள் இங்கு பணி புரிந்து வருவதையடுத்து, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக மூடி சுகாதார நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொது சுகாதார அதிகாரிகள் ஆடைத்தொழிற்சாலை நிர்வாகத்துக்கு அறிவுரை வழங்கியதையடுத்து உடனடியாக ஆடைத்தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது-என்றார்.(ற-இ)

# மேல் மாகாணத்தில் ஊரடங்கை மீறி வெளியேறியோர் விரைவில் கைது?

கொழும்பு, ஒக்.31

ஊரடங்கு உத்தரவை மீறி மேல்மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் சென்றவர்கள் மீது 14 நாள்களின் பின் வழக்குத் தொடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மேல் மாகாணத்தில் இருந்தும் குளியாப்பிட்டியவில் 5 பொலிஸ் பிரிவுகளில் இருந்தும் கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் வெளியிடங்களுக்குச் சென்றவர்கள், 14 நாள்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்படுவார்கள். சிலவேளை அவர்கள் ஹொட்டல்களில் தங்கியிருக்கக்கூடும். சிலர் வீடுகளில் இருக்கலாம். அவ்வாறு இருப்பவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே 14 நாட்கள் இருக்கவேண்டும்.

பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகளிடம் சிக்காமல் மேல்மாகாணத்துக்கு வருபவர்கள் திங்கட்கிழமை பிடிபடுவார்கள். மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் பகுதிகளில் தீவிர சோதனைகள் இடம்பெறும். இதனை தண்டனையாக கருதவேண்டாம். கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாகும். அதேபோல் தகவல்களை மறைப்பதும் குற்றமாகும். எனவே, ஹொட்டல்களில் இருந்தவர்கள், வீடுகளுக்கு சென்றவர்கள் உரிய தகவல்களை வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கிய பின்னர் 14 நாள்களுக்குப் பிறகு வழக்குத் தொடரப்படும். சிலர் 'முன்கூட்டியே பாய்ந்துவிட்டோம்' எனக்கூறி சமூகவலைத்தளங்களில் படங்களை பதிவிட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (வ-44)

## விபத்தில் பெண் சாவு

கொழும்பு,ஒக்.31

அதிக வேகத்துடன் பயணித்த கார், வேகக்கட்டுப்பாட்டை இழந்து பெண்ணொருவரை மோதித்தள்ளியது.

அதில் 76 வயதுடைய சேனபுரநாரங்கல்லேகமப் பகுதியைச் சேர்ந்த பெண் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து இபலோகமகோனபதிராவ பிரதேசத்தில் நடந்துள்ளது.

விபத்து இடம்பெற்றதை அடுத்து, காரின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். பின்னர் கெகிராவப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் உயிரிழப்பு

கொழும்பு,ஒக்.31

நவகமுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தூக்கிட்டு உயிரை மாய்த்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல ஆட்டிகலவைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.


சம்பவத்தில் உயிரிழந்த நபர் 50 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையான சந்தேக நபர், ஏற்கனவே கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்படையவர் என்பதோடு, கூரிய ஆயுதம் ஒன்றால் பலரைத் தாக்கியுள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (க-இ)

## அரசாங்கத்தின் கவனயீனமே மூன்றாம் அலைக்கு காரணம்

### ஐ.தே.க பாய்ச்சல்

கொழும்பு, ஒக்.31



அரசாங்கத்தின் கவனயீனத்தின் பிரதிபலனே கொரோனாவின் இரண்டாம் அலை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அது நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசாங்கத்தினால் காண்பிக்கப்பட்ட தாமதம் கடும் விசனமளிக்கிறது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது தொடர்பிலும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை சரிவர நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. (வ-இ)

## கைக்குண்டு மீட்பு



கிளிநொச்சி,ஒக்.31

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் கைக்குண்டு மீட்கப்பட்டது. மக்களால் கிராம சேவையாளருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, கைக்குண்டு மீட்கப்பட்டது. தருமபுரம் பொலிஸாரால் நீதிமன்ற அனுமதியுடன், இன்று மீட்கப்பட்ட குண்டு, சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது. (க-113)

## நாட்டில் இதுவரை 5 இலட்சம் பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக்.31

இலங்கையில் இதுவரை 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி நேற்று வெள்ளிக்கிழமை மாத்திரம் தொற்று நோயியல் பணியகத்தினால் 10 ஆயிரத்து 173 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 736 ஆக உள்ளது. இதேவேளை நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 424 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## வட மாகாணத்தில் மழைக்குச் சாத்தியம்

கொழும்பு,ஒக்.31

ஊவா, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடமேற்கு முதல் மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## முகக்கவசம் அணியாத 39 பேர் நேற்று கைது

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31

முகக்கவசம் அணியாமல் பொது வெளியில் நடமாடிய 39 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தி வந்தோம். அதனை கட்டாயப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. அதன்பின்னர் மக்களுக்கு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டது. இந்நிலையில் முகக்கவசம் அணியாத, சமூக இடைவெளியைப்பின்பற்றாத அதேபோல் சுகாதார நடைமுறைகளை மீறும் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமானது. நேற்று மாத்திரம் முகக்கசவம் அணியாத, சமூகஇடைவெளியை பின்பற்றி செயற்படாத 39 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நடவடிக்கை தொடரும். கைதானவர்களுக்கு ஆறு மாத சிறை தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும். அதேவேளை, இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்துக்குள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 221 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 44 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளனர். அதேபோல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளில் இருந்து இன்று காலை வரை மொத்தமாக ஆயிரத்து 450 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (வ-44)

# தாமதம் ஏற்பட்டால் 1999க்கு அழையுங்கள்



கொழும்பு, ஒக்.31

கொரோனாத் தொற்றாளர்களை, மருத்துவமனைகளுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டால், சுகாதார மேம்பாட்டு பணியகத்தை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்படி, சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் 1999 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொண்டு, இது தொடர்பில் அறிவிக்க முடியும். இந்த சேவை மூன்று மொழிகளிலும் 24 மணித்தியாலமும் செயற்பாட்டில் இருக்கும். கொரோனாத் தொற்றாளர்களை, மிக விரைவில் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் என்ற போதிலும், தற்போது அதிக தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளயால் தாமதம் ஏற்படுகின்றது. அத்துடன், இந்த நடவடிக்கைகளில், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் குறைபாடுகள் இருக்குமெனில், அது தொடர்பில் கண்டறியப்படும்.

தொற்றாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படும் வரை, வீட்டிலுள்ளவர்கள் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (வ-இ)

## பேரவை உறுப்பினர்களை பெயரிடுமாறு உத்தரவு

கொழும்பு,ஒக்.31

நாடாளுமன்றப் பேரவைக்கான உறுப்பினர்களைப் பெயரிடுமாறு பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தரவிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து, அரசமைப்பு சபை இரத்த தானதால், அதற்குப் பதிலாக நாடாளுமன்றப் பேரவையே உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், சகல சுயாதீன ஆணைக்குழுக்களின் நியமனங்களுக்கான கண்காணிப்பை மேற்கொள்ளும் நடவடிக்கை நாடாளுமன்றப் பேரவையினூடாக முன்னெடுக்கப்படும்.

எவ்வாறாயினும், அந்தக் கண்காணிப்பின் மூலம் விடுக்கப்படும் எதிர்ப்பு அல்லது ஆதரவை கவனத்தில் கொள்ளாமல் செயற்பட, 20 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.(க-இ)

## புதிய சீனத் தூதுவர் இலங்கை வந்தார்

கொழும்பு, ஒக்.31

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் புதிய தூதுவர் சென்ஹொங் இன்று நாட்டை வந்தடைந்தார். இவர், பி.சி.ஆர். பரிசோதனையை நிறைவு செய்து சீன ஈஸ்டேர்ன் ஏயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. புதிய தூதுவர், அடுத்து வரும் இரு வாரங்களுக்கு சுயதனிமைப் படுத்த லில் தன்னை ஈடுபடுத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே, விமான நிலையத்தில் வைத்து வைபவரீதியான வரவேற்பை இலங்கையின் தற்போதைய நிலைமை கருதி தூதுவர் மறுத்துவிட்டார் எனவும் சொற்ப அளவிலான சீன தூதரக இராஜதந்திர சேவையில் உள்ளவர்களே அவரை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்றனர் எனவும் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

புதிய தூதுவர் சென்ஹொங், 1988 ஆம் ஆண்டு முதல் சீன இராஜதந்திர சேவையில் செயற்பட்டு வந்தார். சீன சர்வதேச கற்கைகள் நிறுவனத்தின் தலைவரான இவர், பொருளாதார நிபுணருமாவார்.

பீஜிங்கில் உள்ள இராஜதந்திர சேவைகளுக்கான பணியகத்தில் செயற்பாட்டு பிரதிப் பணிப்பாளராக செயற்பட்டுள்ளதோடு, சீனபிரிட்டிஷ் கூட்டுக் குழுமத்தின் இரண்டாம் நிலை செயலாளராகவும் செயற்பட்டுள்ளார். (ற)

## பயணக் கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டும்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.31

கொரோனா பரவும் சாத்தியப்பாடுகள் உள்ள அதிக அபாயமுள்ள பகுதிகளுக்கான பயணக்கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளதாவது, சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் 80 வீதம் வரை பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமெனில், அதிக ஆபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும். ஏற்கனவே பெறப்பட்ட சுமார் 20 ஆயிரம் பி.சி.ஆர் மாதிரிகள், பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. அவற்றை விரைவாக பரிசோதனைக்கு உட்படுத்தாவிடில் உரிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும். அத்துடன், கொரோனாத் தொற்றின் தாக்கம் நாடு முழுவதும் பரவுவதைத் தடுக்கும் வகையில் சீரான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## பணத்தகராறும் சகோதரர் கொலை

கொழும்பு,ஒக்.31

குடும்பத்தில் பணத் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்கு வாதத்தை அடுத்து, மூத்த சகோதரர் ஒருவர் தனது தம்பியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். அதனால் தம்பி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மஹி யங்கனையில் நேற்றிரவு நடந்துள்ளது. சம்பவத்தில் உயிரிழந்த நபர் 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த உயிரிழந்த நபரின் மனைவி மஹியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)




## தொழில் பேட்டைகளில் இதுவரை 423 தொற்றாளர்கள் அடையாளம்

கொழும்பு, ஒக்.31

இலங்கை முதலீட்டாளர் சபையினால் நிர்வகிக்கப்படும் தொழில் பேட்டைகளில் இதுவரை 423 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் சஞ்ஜய மொஹொட்டிடால தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களில் 411 பேர் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 12 பேர் பியகம தொழில் பேட்டையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 8 திகதி முதல் 28 ஆம் திகதி வரையான 20 நாள்களில் முதலீட்டாளர் சபையால் நிர்வகிக்கப்படும் தொழில் பேட்டைகளில் 16,527 பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இவற்றில் 423 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 495 பரிசோதனை முடிவுகள் இன்னும் கிடைக்கவுள்ளன.(ற-இ)



## கேகாலையில் 9 பேருக்கு தொற்று

கொழும்பு, ஒக்.31

கேகாலைபுளத்கொஹூபிட்டி பகுதியில் 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, புளத்கொஹூபிட்டி மற்றும் லேவல ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுடன் தொடர்புடையவர்களை அடையாளப்படுத்தி தனிமைப்படுத்தலுக்கு அனுப்பும் வரை, இந்தத் தடை விதிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-இ)

## குழுக்களிடையே மோதல் ஒருவர் பலி: ஐவர் காயம்

கொழும்பு,ஒக்.31

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட குழு மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் வீரகெட்டிய மொரயாய பிரதேசத்தில் நேற்றிரவு நடந்துள்ளது.

சம்பவத்தில் 17 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# 20 க்கு வாக்களித்தோருக்கு அடுத்த வாரம் நடவடிக்கை

## ஐ.ம.ச. பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.31



அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் மீது, அடுத்த வாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான சட்ட ஆலோசனைகள் பெறப் பட்டுள்ளன. அடுத்த கட்ட மாக விசாரணைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள் ளது என்று பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான டயானா கமகே, இஷாக் ரஹுமான், எம்.ரஹீம், நசீர் அகமட், மொஹமட் ஹரிஸ், பைசல் காசிம், அரவிந்த்குமார் மற்றும் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதேவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பின ரான லக்ஷ்மன் கிரியெல்ல, குறித்த உறுப்பினர்களைக் கட்சியில் இருந்து வெளி யேற்றியதால், அவர்களை அரசுடன் அமர வைக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்த னவிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(க-இ)

## மேலும் சில இடங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக்.31

கொழும்பு மிரிஹானை பகுதிக்கு உட்பட்ட சில பிரதேசங்கள் தனி மைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. வெல்சிறி புர, ராவுலபுர மற்றும் ப்ரகதிபுர ஆகிய பகுதிகளே இவ்வாறு தனி மைப்படுத்தப்பட்டுள்ளன. கொரோ னாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயலணி வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

## இம்முறை பல்கலைக்கு 41,500 மாணவர்கள்

கொழும்பு, ஒக்.31

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 41,500 மாணவர்கள் இணைத்துக்கொள் ளப்படவுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித் துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை புதிதாக 10,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ள னர். மருத்துவ பீடங்களுக்கு 371 மாணவர் களும், பொறியியல் பீடங்களுக்கு 405 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்ப டவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (ஐ-இ)



## சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

கிளிநொச்சி, ஒக்.31

கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக் கையை கட்டுப்படுத்தும் முகமாக கிளிநொச்சி மாவட்ட 12 பொது சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கிளிநொச்சி சுகாதார பணிமனை யில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சுகாதார அமைச்சின் மோட்டார் போக்குவரத்து அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். உலக வங்கியின் நிதியில் சுகாதார அமைச்சால் இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஐ-113)




## தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டோருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.31

கிளிநொச்சியில் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ள சிறுவர் இல்லம் மற்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள், சுகாதாரப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள் ளன. கிளிநொச்சி மலையாள புரத்தில் இயங்கும் அந்த சிறுவர் இல்ல இயக்குநரின் கோரிக்கைக்கு அமைவாக கிளிநொச்சி நகர றோட்ட றிக் கழகத்தினால் இவை வழங்கப்பட்டுள்ளன. பொருள்கள் அனைத்தும் சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டலுடன், உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி வழங்கப்பட்ட. சிறுவர் இல்லத்தில் பணிபுரி பவர்கள் தனிமைப்படுத்தப் பட்ட மலையாளபுரம்,பார திபுரம், பரந்தன் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள் ளன. மேலும் விசுவமடு, தேராவில், கல்மடு ,கட் டைக்காடு, மற்றும் தருமபு ரம் பகுதிகளில் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் சிலவற்றுக்கும் பொருள்கள் வழங்கப்பட் டுள்ளன. (வ-214)





## வாழைச்சேனையில் தொடர் பரிசோதனை

மட்டக்களப்பு,ஒக்.31

வாழைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவில், பி.சி.ஆர். பரிசோதனை கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின் றன. வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 31 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து கொரோனாத் தொற்றாளர் கள் சென்ற இடங்களில் கடமையாற்றியவர் கள், வெளி இடங்களில் இருந்து வந்தவர்கள் விபரங்கள் திரட்டப்பட்டு, பி.சி.ஆர். பரிசோ தனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று சனிக்கிழமை வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் தொழில்புரியும் அன்றாட தொழிலாளிகள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத் தர்கள், வாழைச்சேனை ஐஸ் தொழிற்சாலை ஊழியர்கள், கொழும்பு சென்று வந்து தனிமைப் படுத்தலில் உள்ளவர்கள் என 25 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றன. (க-150)

## வெல்லம்பிட்டியவில் ஒருவருக்கு தொற்று

கொழும்பு, ஒக்.31



வெல்லம்பிட்டியவி லுள்ள பொருள் இறக்குமதி நிறுவனத்தில் கடமை யாற்றும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தில் பணியாற்றும் 50 பேர் கடந்த 27 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெறாத நிலையில், அவர் தனது கர்ப்பி ணியான மனைவியுடன் காசல் வைத்தியசா லைக்குச் சென்று பின்னர், மீகொட பகுதியிலுள்ள தனது மனைவியின் வீட்டுக்கும் சென்றுள்ளார்.

அவர் மீண்டும் தனது தொழில் நிலையத்துக்குச் சென்ற நிலையில், அவருக்குத் தொற்று ஏற்பட்டுள் ளமை தெரியவந்துள்ளது. அதன் பின்னர் அவரு டன் நெருங்கிப் பழகியவர்கள் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கஹாது டுவ பதில் பொதுச் சுகாதார பரிசோதகர் சீ. சமரசேகர தெரிவித்தார்.

அந்தவகையில், 4 வீடுகளைச் சேர்ந்த 12 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரின் மனைவியின் மீகொட இல்லத்தை சேர்ந்த வர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.(றஜி)

# துருக்கியை புரட்டியெடுத்த நிலநடுக்கம்

## ■ இதுவரை 26 பேர் உயிரிழப்பு ■ 800க்கும் மேற்பட்டோர் காயம்









வெலிங்டன், ஒக்.31

நியூசிலாந்தில் கருணைக்கொலையை சட்டமாக்குவதற்கு ஆதரவாக பெரும்பான்மை வாக்குகள் கிடைத்துள்ளன. இதன்படி வாழ்வை முடித்துக் கொள்ளும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவாக 65.2 வீத வாக்குகள் பதிவாகி உள்ளன என ஆரம்பக்கட்ட முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த சட்டத்தின்படி ஆறு மாதங்களுக்கு குறைவான காலமே உயிர்வாழ வாய்ப்பு இருக்கின்ற நோயாளர்கள் இரு மருத்துவர்களின் ஒப்புதலோடு மருத்துவர் உதவியுடன் உயிரை மாய்த்துக்கொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர். எனினும் இந்த சட்டத்தில் போதுமான பாதுகாப்பு இல்லை என்று அதனை எதிர்ப்பவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான முடிவுகள் நேற்று வெளியானபோதும் இதன் உத்தியோக பூர்வ முடிவு வரும் நவம்பர் 6 ஆம் திகதியே வெளியாகவுள்ளது.

இந்தச் சட்டம் எதிர்வரும் 2021 நவம்பர் மாதமே அமுல்படுத்தப்படவுள்ளது. இதன்படி நெதர்லாந்து, கனடா உட்பட ஒருசில நாடுகளின் வரிசையிலேயே கருணைக் கொலைக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கும் நாடாக நியூசிலாந்து மாறவுள்ளது. (வ-இ)

## ஒரே நாளில் 5 லட்சம் கொரோனா தொற்றாளர்கள்

உலக அளவில் கடந்த வியாழக்கிழமை மட்டும் புதிதாக 5 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே நாளில் அரை மில்லியனுக்கும் அதிகமானோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை இதுவே முதல் முறை. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் நோய்த்தொற்றுக்கு ஆளாவோர் எண்ணிக்கை 25 வீதமாக அதிகரித்துள்ளது.

ஐரோப்பாவிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் முன்னெப்போதும் இல்லாத அளவில் நோய்த்தொற்றுக்கு ஆளாவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

உலக அளவில் 44.7 மில்லியன் பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1.17 மில்லியன் பேர் உயிரிழந்துள்ளனர். (வ-இ)



## கொரோனா காவு...

ழந்த பெண்ணுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இந்தப் பெண், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு 12 (புதுக்கடை) ஐச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார். இறுதியாக கடந்த 27ஆம் திகதி இலங்கையில் 17ஆவது, 18ஆவது, 19ஆவது கொரோனா இறப்புக்கள் பதிவாகியிருந்தன. இலங்கையில் கொரோனாவால் இதுவரை 13 ஆண்களும், 7 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் சிக்கி கடந்த 8 நாள்களில் (ஒக்ரோபர் 22 ஒக்ரோபர் 30வரை) 7 பேர் (4 ஆண்கள், 3 பெண்கள்) உயிரிழந்துள்ளனர். (எ-22)



## மக்ரோனுக்கு வலுக்கும் எதிர்ப்பு

இஸ்லாமபாத், ஒக். 31

பிரான்ஸின் ஜனாதிபதியான இம்மானுவேல் மக்ரோனைக்கு எதிராக பாகிஸ்தானில் போராட்டம் மேற்கொள்ளகப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் இறைதூதர் முகமது நபி தொடர்பான சித்திரங்கள் வெளியிடப்படும் என மக்ரோன் சமீபத்தில் கூறியிருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானில் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள பிரான்ஸ் தூதரகத்தை 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றனர். போராட்டத்தைக் கலைக்க கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டுள்ளன. (வ-இ)

## புங்குடுதீவு...,

ஈடுபடும் தனியார் படகும் இடைநடுவிலே திரும்பிச் சென்றுள்ளது.

புங்குடுதீவு மடத்துவெளியில் கொரோனா பாதுகாப்புச் சோதனை நடவடிக்கையில் சுகாதாரப் பரிசோதகர்களும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர். போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்குக் கொரோனாத தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகின்றது.

தேவை ஏற்படின் தீவகங்களுக்கான போக்குவரத்துத் தடுக்கப்படும். அது தொடர்பாக இன்னும் முடிவு எட்டப்படவில்லை என்று சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (எ-20)

## வழிபாட்டில்...

இன்று மதியம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்குள்ள சிவநாகதம்பிரான் ஆலயத்தில் பௌர்ணமி தின சிறப்பு பூசைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சுகாதாரப் பாதுகாக்கு வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பூசையில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவித்தே அங்கிருந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்றும், பூசையில் கலந்துகொண்டவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-18)